செ.வெ.எண்: 82 நாள்: 30.01.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இந்திய சுதந்திரப்போராட்ட தியாகிகளுக்கு மௌன அஞ்சலி செலுத்தி தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை அனைத்து அரசு அலுவலர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.01.2017) ஏற்றுக்கொண்டனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்திய சுதந்திரப்போராட்ட தியாகிகளுக்கு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதுடன் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியான "இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்" என்று வாசிக்க அனைத்து அரசு அலுவலர்களும் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், உதவி ஆணையர் (கலால்) திருமதி.ஜெயபாரதி, மாவட்ட ஆட்சியரக அலுவலக மேலாளர் (நீதியியல்) திரு.கண்ணாகருப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**